REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2021 ஜனவரி 19 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 89 இல. 16 | January 19, January, 2021 | 16 பக்கங்கள் | 30/-




பாராளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ள

## இலங்கையருக்கு கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கல்



### எவரும் அச்சப்படத் தேவையில்லை என்கிறார் அமைச்சர் சரத் வீரசேகர

18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து இலங்கை குடிமக்களுக்கும் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்குவதற்கான திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர நேற்று தெரிவித்தார்.

இந்த முன்மொழிவை எண்ணி எவரும் அச்சமடையத் தேவையில்லையென்றும், இந்த தீர்மானம் நாட்டின் முன்னேற்றத்தை கருத்திற் கொண்டதென்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பயிற்சி மக்கள் தமது சொந்த காலில் நிற்கவும், தலைமைத்துவ குணங்களை ஊக்குவிக்கவும், ஒழுக்கமான மற்றும் சட்டத்தை மதிக்கும் நாட்டிற்கு

06

## பாராளுமன்றம் இன்றும் நாளையும் மட்டுமே கூடும்

### கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



பாராளுமன்றத்தில் கொவிட் வைரஸ் தொற்றுக்கு உள்ளான பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களும் பணியாளர்களும் கண்டறியப்பட்டுள்ளதால் இவ்வாரம் இரண்டு நாட்கள் மாத்திரம் பாராளுமன்ற அமர்வை நடத்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

06

## மேல்மாகாண பாடசாலைகளை திறக்கும் முடிவு இரு வாரங்களில்

### கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவிப்பு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



மேல்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளை எதிர்வரும் இரண்டுவாரக் காலப்பகுதிக்குள் உரிய சுகாதார வழிகாட்டல்களுடன் ஆரம்பிப்பதற்கான விசேட பேச்சுவார்த்தை நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த 11ஆம் திகதி பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டது முதல் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை 59 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது.

06

உள்நாட்டு வெளிநாட்டு கடத்தல்கா

## போதைப்பொருள் 6 முற்றாக முறியடிக்




### தேவையான அனைத்து நடவடிககைகளையும முனமனடுகக தரமானம



### மக்கள் பாதுகாப்பு அமைச்சர், நீதி அமைச்சர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேற்று கலந்துரையாடல்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

இலங்கையின் போதைப்பொருள் வலையமைப்பை முற்றாக முறியடிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பத்தரமுல்லை இசுறுபாயவில் அமைந்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் நேற்று திங்கட்கிழமை இந்த விடயம் தொடர்பில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, நீதி அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்ன, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் ஜெகத் அல்விஸ், பொலிஸ் மாஅதிபர் சந்தன விக்ரமரட்ன, பிரதி பொலிஸ் மாஅதிபர் உட்பட துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடல் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ் மாஅதிபருமான அஜித் ரோஹன,

போதைப் பொருள் வர்த்தகர்கள், கடத்தல்காரர்கள் மற்றும் பகிர்ந்தளிப்பவர்களை சுற்றிவளைப்பது கலந்துரையாடலின் விசேட கருப்பொருளாக அமைந்தது. இந்த நடவடிக்கைகள்

06

கொழும்பு பல்கலைக்கழகத்தின்

## கலை, விஞ்ஞான பீடங்களின் நூற்றாண்டு விழா ஜனவரி 21 இல்

### ஜனாதிபதி, பிரதமர் அதிதிகள்

இலங்கையில் உயர் கல்வி வாய்ப்புகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் கொழும்பு பல்கலைக்கழகம், தனது கலை மற்றும் விஞ்ஞான பீடங்கள் மற்றும் பிரதான நூலகம் ஆகியவற்றின் நூற்றாண்டு பூர்த்தியை குறிக்கும் வகையில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடர் நிகழ்வுகளை

06




உலக நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா;

## கடந்த 24 மணி நேரத்தில் 5 இலட்சம் பேருக்கு தொற்று



- பத்து கோடியை நெருங்கும் தொற்றாளர்
- இருபது இலட்சம் பேர் உயிரிழப்பு

உலகில் கொரோனா வைரஸ் தோற்றுநோயாளர் எண்ணிக்கை 95 கோடியைக் கடந்துள்ளதாக சர்வதேச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை உலகில் 219 நாடுகளில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுவதால் தொற்று பரவல் அதிகரிப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகின்றது. நேற்றைய

06

## வெளிநாடுகளிலிருந்து வருகை தரும் இலங்கையரது பிரச்சினைகளுக்கு தீர்வு



### ஹோட்டல் கட்டணம் விரைவில் குறைக்கப்படும் என்கிறார் இராணுவ தளபதி

கொவிட்19 தொற்றின் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியிருந்த இலங்கையரை நாட்டுக்கு அழைத்து வரும் போது அவர்கள் முகங்கொடுத்த இரு பிரதான பிரச்சினைகளான விமான கட்டண அதிகரிப்பு மற்றும் ஹோட்டல்களில் தனிமைப்படுத்தப்படுபவர்களின் கட்டண அதிகரிப்பு என்பவற்றுக்கு எதிர்வரும் ஓரிரு தினங்களில் தீர்வு வழங்கப்படுமென இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். இது குறித்து ஊடகங்களுக்கு

06

30 இலட்சம் மக்களது வாழ்வாதாரத்திற்கு வழிகோலும் செயற்பாடு

## சுற்றுலாப் பயணிகளுக்காக 21 முதல் விமான நிலையங்கள் திறக்கப்படும்



### சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றி நடவடிக்கைகள் முன்னெடுப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் எதிர்வரும் 21ஆம் திகதி உல்லாசப் பயணிகளுக்காக விமான நிலையத்தை முற்றாக திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பயணிகளிடம் இருந்து சமூகத்திற்கும் சமூகத்திலிருந்து சுற்றுலா பயணிகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதை

06

இரண்டு மாத குழந்தை தகனம்

## டுவிட்டரில் பதிவு செய்த அலிசாஹிர்

வெலிகமவில் பெற்றோரின் சம்மதத்தை பெறாமல் இரண்டுமாத குழந்தையின் உடலை அதிகாரிகள் தகனம் செய்த சம்பவம் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா தனது டுவிட்டரில் பதிவு செய்துள்ளார். அவர் அதில்

06



அரசின் ஆணைக்குழு குறித்து கருத்து கூற விரும்பவில்லை

## ஜெனீவாவில் எமது செயற்பாடுகள் திட்டமிட்டவாறு முன்னெடுக்கப்படும்

### தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை



## இராஜாங்க அமைச்சர் பியலுக்கு கொரோனா தொற்று உறுதி

### அமைச்சர் ஜீ.எல் சுயதனிமைப்படுத்தலில்



இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த டி சில்வாவிற்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் என்டிஜன் பரிசோதனை மூலம் அவருக்கு கொவிட் 19

முகத்துவாரம் மீன்பிடித் துறைமுக நஷ்ட வழக்கு;

## ராஜித உள்ளிட்ட மூவரும் சரீரப் பிணையில் விடுதலை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொழும்பு முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்தை குத்தகைக்கு விடும் செயற்பாடுகளின் போது அரசாங்கத்

## பெற்றோலியம் களஞ்சிய, விநியோகம் தொடர்பான விசேட கணக்காய்வு

### கோப்குழுவில் இன்று ஆராய்வு

இலங்கையில் பெற்றோலியத்தை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பான விசேட கணக்